## மாவட்ட ஆட்சியரின் பத்திரிக்கை செய்தி

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின்கீழ் செயல்படும் விருதுநகர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் புறத்தொடர்பு பணியாளர் 1 பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் (முற்றிலும் தற்காலிக பணியிடம்) நிரப்பப்பட உள்ளது. இப்பணியிடத்திற்கான வயது வரம்பு 42 வயதிற்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

விருதுநகர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் புறத்தொடர்பு பணியாளர் பணிக்கு ஒரு மாத தொகுப்பூதியம் ரூ.10,592/- வழங்கப்படும். இப்பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருக்கவேண்டும். சிறந்த தகவல் தொடர்பு திறன் மற்றும் பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்கண்ட பணிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மேலும் உரிய விண்ணப்பங்கள் அதிகாரப்பூர்வ இணைய தளமான www.virudhunagar.nic.in லிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். இப்பதவிகளுக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் புகைப்படத்துடன் "மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், அறை எண்.503, 5வது தளம், விருதுநகர்- 626002. தொலைபேசி எண். 04562-293946" என்ற முகவரிக்கு 19.12.2025 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பின்வரும் விண்ணப்பங்கள் தகவலின்றி நிராகரிக்கப்படும்.

3/12/25

மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர்.

2/2

3/12/25